செ.வெ.எண்:20/ஜூன் நாள்:10.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் கழிவு நீர் சேகரிக்கும் தொட்டியில் தவறி விழுந்த நபரை காப்பாற்ற சென்று மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு நிவாரண உதவித் தொகையாக ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (10.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், கடந்த 20.04.2016 அன்று கடலாடியில் உள்ள பொது சுகாதார வளாகத்தின் கழிவுநீர் சேகரிக்கும் தொட்டியில் தவறி விழுந்த நபரை காப்பாற்ற சென்று மூச்சுத் திணறி மரணமடைந்த திரு.பாலமுருகன் என்பவரது மனைவிக்கு கடலாடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து நிவாரண நிதி உதவித் தொகையாக ரூ.3,00,000/-க்கான காசோலையினை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம், கடலாடி பேருந்து நிலைய வளாகத்தின் அருகில் உள்ள பொது சுகாதார வளாகத்தில் உள்ள கழிவு நீர் சேகரிக்கும் தொட்டியின் மேல்புறத்தினை சுத்தம் செய்த போது, சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட திரு.இராமசாமி என்பவர் கழிவு நீர் சேகரிக்கும் தொட்டியில் தவறி விழுந்தார். அவரை காப்பாற்றுவதற்காக கடலாடி இந்திரா நகர் காலனியில் வசித்து வந்த திரு.முனியாண்டி என்பவரது மகன் திரு.பாலமுருகன் என்பவர் சென்ற போது கழிவு நீர் சேகரிக்கும் தொட்டியில் மூச்சுத் திணறி இறந்தார்.

கழிவு நீர் சேகரிக்கும் தொட்டியில் விழுந்து மரணமடைந்த திரு.பாலமுருகனின் குடும்பத்தாருக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், கடலாடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து நிவாரண நிதி உதவியாக ரூ.3,00,000/-க்கான காசோலையினை பாலமுருகனின் மனைவி திருமதி.பஞ்சு செல்வராணி என்பவரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.ந.கணபதி உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**